முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பத்மநாபபுரம்.

முன்னிலை .. திரு.A.மருதுபாண்டி, பி.காம்., பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பத்மநாபபுரம்.

2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ஆம் தேதி புதன்கிழமை

**நிறைவேற்றல் மனு எண். 36 / 2007**
**in**
**அசல் வழக்கு எண். 412 / 1995**

1. ரெஜீனா பாக்கியவதி நாடாச்சி (இறப்பு)
2. கூடுதல் 2. வி. ராஜையன்
3. கூடுதல் 3. அறிவர். ஆர்.பிரபாவதி பிரின்சில்லா சினேகா பாய்
4. கூடுதல். 4. வி.ஆர். ராஜ்குமார்
5. கூடுதல் 5. அறிவர். வி.ஆர். ராஜசிங்
6. கூடுதல் 6. வி.ஆர்.இராஜேஸ்வர்
7. கூடுதல் 7. வி.ஆர். இராஜீவ்
8. கூடுதல் 8. வி.ஆர்.சஜீவ் (இ.ஏ.288/2007–ன்படி கூடுதல் வாதிகளாக சேர்க்கப்பட்டது) ... தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள்

/எதிர்/

புஷ்பராஜ் ... தீர்ப்புகடனாளி/பிரதிவாதி

*****

இவ்வழக்கு 06.03.2024 அன்று என் முன் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. செல்லப்பன் அவர்கள் ஆஜராகியும், தீர்ப்பு கடனாளி தரப்பில் வழக்கறிஞர் திரு.தாயுமானசுவாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை

இந்த நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் நிறைவேற்று மனு, வாதிக்கு பிரதிவாதிகள் இவ்வழக்குரைத் தொகையாக ரூ.4942-ம் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் பணம் ஈடாகும் நாள் வரை ரூ.4942-க்கு ஆண்டுக்கு ஒருமுறை 6 சதவீத பின்வட்டியும் கொடுக்க வேண்டும். இந்த தொகையை தீர்ப்பு கடனாளிகள் அவர்களது அசையும் மற்றும் அசையா சொத்துக்களிலிருந்து ஈடாக்கி கொள்ளவேண்டும், தாவா சொத்தின் வேலிக்கும் எல்லை வரையறை கோடிலுமாக நிறுவப்பட்டிருக்கும் வரி முட் கம்பியை தீர்ப்பு கடனாளிகளோ அவர்களது ஆட்களோ அழிக்கக்கூடாதது என்று நிரந்தர உறுத்து கட்டளை வழங்கியும், 6 அடி நீளமுள்ள 56 கல் தாவா சொத்தின் தெற்கு பக்க எல்லை வழியாக தீர்ப்புகடனாளிகள் அமைக்க வேண்டுமென்றும், தவறினால் தீர்ப்பாணை பெற்றவர் செலவில் நீதிமன்ற நிறைவேற்றுகை மூலம் மேற்சொன்ன கல்வேலி அமைத்து அவர்களின் செலவை தீர்ப்பு கடனாளிகளிடம் ஈடாக்கி கொள்ள வேண்டும், செலவு தொகையாக ரூ.1374.95 தீர்ப்புகடனாளிகள் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும் தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

தீர்ப்பாணைபெற்றவர்கள்/வாதிகள் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை அனுசரித்து தீர்ப்பு கடனாளிகள் நஷ்டமும் செலவும்

இதுவரையிலும் கெட்டி வைக்காமல் இருப்பதுமாகும். தீர்ப்பாணை அனுசரித்து நஷ்டமும் நீதிமன்ற செலவும் ஈடாக்குவதற்கு 1–ஆம் தீர்ப்பு கடனாளியின் வகையான ஐப்தி பட்டிகை சொத்துக்களை ஐப்தி செய்து ஏலத்தில் விற்றும் தொகை ஈடாக்கி கிடைக்க வேண்டியதும் அல்லாமல் தீர்ப்பாணை தொகை ஈடாக்குவதற்கு முடியாது என்பதுமாகும். எனவே, இந்நிறைவேற்று மனு அனுமதிக்கத்தக்கதாகும்.

3. <u>தீர்ப்புகடனாளி / 1–ஆம் பிரதிவாதியின் எதிருரை சுருக்கம்</u> : –

நிறைவேற்றல் மனுவில் கூறப்படும் தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதி ரெஜினா பாக்கியவதி நாடாச்சி என்பவர் இந்த எதிர்மனுதாரரையும், மற்ற ஏழு பிரதிவாதிகளையும் எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து இ.பி.எண். 15/2006–ஐ கடந்த 20.01.2006–இல் தாக்கல் செய்து முடிவுற்று உள்ளதுமாகும். அசல் வழக்கில் 1–ஆம் பிரதிவாதியான எதிர்மனுதாரரை மட்டும் எதிர்மனுதாரராக சேர்த்தும் மற்ற பிரதிவாதிகள் 2 முதல் 8 வரை உள்ள நபர்களை எதிர்மனுதாரர்களாக சேர்க்காமலும் இ.பி.எண். 36/ 2007–ஐ தாக்கல் செய்துள்ளார்கள். மற்ற பிரதிவாதிகளை விட்டு விட்டு இந்த எதிர்மனுதாரரை மட்டும் கட்சியாக சேர்த்து இ.பி.தாக்கல் செய்யவும், முழு தீர்ப்பாணை தொகையையும் அவரிடமிருந்து மட்டுமே ஈடாக்கவும், சட்டபடி எவ்வித உரிமையும் தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு

இல்லாததுமம் அவ்வாறு செய்ய உரிய நீதிமன்ற அமைதியோ அல்லது திருத்தப்பட்ட தீர்ப்பாணையோ பெறாததும் ஆகும். மேலும், தீர்ப்பாணை பெற்றவர்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 412/1995 எல்லா பிரதிவாதிகளிடம் இருந்தும் நஷ்டஈடு தொகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி தீர்ப்பாணையிலும் நீதிமன்றம் மிக தெளிவாக பிரதிவாதிகளிடமிருந்து அவர்களது அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களில் இருந்தும் ஈடாக்கி கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிலையிலும், 1–ஆம் பிரதிவாதியிடமிருந்து மட்டுமே ஈடாக்கி கொள்ள வேண்டுமென்று குறிப்பிடாத நிலையில் தீர்ப்பாணைக்கு மாறான முறையில் பரிகாரம் கேட்டு தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இந்நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**4.** தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் இந்நிறைவேற்று மனுவில் கோரியுள்ளவாறு 1–ஆம் தீர்ப்பு கடனாளியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை ஈடாக்கி கொள்ள தீர்ப்பாணைபெற்றவர்கள் /வாதிகளுக்கு உரிமையுள்ளதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

5. **<u>தீர்வு</u>** :

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

1. தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் தீர்ப்பு கடனாளி தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு ஏற்படுத்திய சேதத்திற்கு ரூபாய் 4942–ஐயும் மேலும் அதனை ஈடாக்கும் வரை வருடத்துக்கு 6 சதவீத வட்டியுடன் கணக்கிட்டு கொடுக்க வேண்டுமென்று அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட போதும் இந்நாள் வரை தீர்ப்பாணை தொகையை ஈடாக்கி கொடுக்க முன் வராததால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி தீர்ப்பாணை தொகையை செலுத்த தீர்ப்பு கடனாளிகள் அனைவரும் கூட்டாகவோ அல்லது தனியாகவோ செலுத்த கடமைபட்டவர்கள் என்றும் தவிர இந்நாள் வரை செலுத்தவில்லை என்பதால் தீர்ப்பு கடனாளியின் சொத்தை பற்றுகை செய்து ஏலத்தில் கொண்டு வந்து விற்பனை செய்து மேற்படி தொகையை ஈடாக்கும் வகைக்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிட்டு மாண்புமிகு ஆந்திர பிரதேச உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு நெறியான AIR 2005 AP 482–ஐ முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

2. தீர்ப்பு கடனாளி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அசல் வழக்கில் மொத்தம் 8 பிரதிவாதிகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் தவிர தீர்ப்பாணை தொகை முழுவதையும் இம்மனு தீர்ப்பு கடனாளி தனியாக செலுத்த வேண்டுமென்று தீர்ப்பாணையில் குறிப்பாக

கூறவில்லை என்றும் ஆனால் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகையில் இம்மனு தீர்ப்பு கடனாளி தனது பங்கை மட்டும் செலுத்துவதற்கு தற்போதும் தயாராக உள்ளார் என்றும் தவிர தீர்ப்பாணை தொகையை கூட்டாகவோ அல்லது தனிதனியாகவோ செலுத்த வேண்டுமென்று கட்டளையிடாததால் தீர்ப்பாணை தொகை முழுவதையும் இம்மனு தீர்ப்பு கடனாளி மட்டுமே செலுத்த வேண்டிய தேவையில்லை என்றும், மேலும் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையானது பண தீர்ப்பாணை அல்ல என்பதால் மேற்படி தொகையை இம்மனு தீர்ப்பு கடனாளி மட்டும் தனிபட்ட முறையில் செலுத்த கடமைபட்டவர் அல்ல என்பதாலும் இம்மனு தீர்ப்பு கடனாளியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டுமென்று வாதிடப்பட்டது.

3. மேற்படி சூழ்நிலையில், தீர்ப்பாணையை மிக கவனமாக பரிசீலனை செய்கையில் அசல் வழக்கானது மொத்தம் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதிகளுக்கு ஏற்படுத்திய சேதத்திற்கு நஷ்ட ஈட்டு தொகையாக தீர்ப்பாணை தொகையை 8 பிரதிவாதிகளும் செலுத்த வேண்டுமென்றுதான் கட்டளையிடப் பட்டுள்ளதே தவிர இம்மனு தீர்ப்பு கடனாளி மட்டும் தீர்ப்பாணை தொகையை தனிபட்ட முறையில் செலுத்த வேண்டுமென்று குறிப்பாக கட்டளையிடப்படவில்லை. மேலும், தீர்ப்பு கடனாளி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டது போன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையானது பண தீர்ப்பாணை அல்ல என்பதாலும் தீர்ப்பாணை

தொகை முழுவதையும் இம்மனு தீர்ப்பு கடனாளி மட்டுமே செலுத்த கடமைபட்டவர் அல்ல.

**AIR 2005 AP 482, Damera Narsimha Reddy Vs. Syed Ibrahim** :-

மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்படி வழக்கில் விவாதிக்கையில் தீர்ப்பாணை தொகையை செலுத்த தீர்ப்பு கடனாளிகள் கூட்டாகவும் மற்றும் தனிபட்ட முறையிலும் பொறுப்பு உடையவர்கள் என்று கட்டளையிட்டு இருந்தாலொழிய தீர்ப்பு கடனாளிகள் பல நபர்களில் ஒருவருக்கு எதிராக மட்டும் நிறைவேற்றல் மனு தாக்கல் செய்து தீர்ப்பாணை தொகை முழுவதையும் பெற தீர்ப்பாணைபெற்றவர்கள் உரிமையுடையவர்கள் அல்ல என்று கூறியுள்ளது. மேலும், மேற்படி வழக்கில் விவாதித்தது போன்று இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையிலும் தீர்ப்பாணை தொகை முழுவதையும் இம்மனு தீர்ப்பு கடனாளி மட்டுமே செலுத்த வேண்டுமென்று குறிப்பாக கட்டளை எதுவும் இடாததால் மேற்படி முன்தீர்ப்பு நெறியானது தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு எதிராகவும் தீர்ப்பு கடனாளிக்கு ஆதரவாகவும் அமைந்துள்ளது.

## 6. இறுதி முடிவு :–

முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தாளரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பத்மநாபபுரம்.

மு.மா.உ.நீ., பத்மநாபபுரம்.
<u>சீரான / வரைவு உத்தரவு</u>:

<u>நி.ம.எண்.36/2007</u>
<u>அ.வ.எண்.412/1995</u>
தேதி: 06.03.2024